Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6 காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 8-2-1947 தை மீ 26உ { மலர் 18

# கந்தப்புராணமும் இராமாயணமும் இரண்டும் ஒன்றே

மணியம்மை தொகுத்தது

(8-7-44 'குடி அரசு' தொடர்ச்சி)

முன்பு 25 பொருத்தங்கள் தொகுத்தெழுதப்பட்டன. இப்போது மேலும் 30க்கு மேற்பட்ட பொருத்தங்கள் தொகுத்தெழுதப்படுகின்றன.

இதைக் கண்ணுறும் பண்டிதர்கள் இந்த இரு கற்பனைக் கதைகளையும் ஆராய்ந்து மேலும் பொருத்தங்கள் கிடைத்து அதை அறிவிப்பார்களானால் நன்றியறிதலோடு ஏற்றுப் பிரசுரிக்கப்படும்.

எனது கருத்து நான் ஆராய்ந்தவரையில் கந்தப்புராணம் முந்தினது என்பதும், அது சற்று நாகரீகமில்லாத காலத்தில் சைவபரமாக மிகுந்த காட்டுமிராண்டித் தன்மையில் கற்பிக்கப்பட்டதென்பதும், மிகப் பிந்தியகாலத்தில் இராமாயணம் கந்தப்புராணக் கதையையே பாத்திரங்களுக்கு வேறுபெயர்களைப்போட்டு வைணவபரமாகத் திருத்தி எழுதப்பட்டதாகும் என்பதுமாகும்.

வால்மீகி என்பதுகூட ஒரு கற்பனைப்பேரே ஒழிய அதிலும் சிறிதும் உண்மை இருக்க இடமில்லை.

கந்தப்புராணத்தில் உள்ள சில மாய்மை (காட்டுமிராண்டி) தன்மை இராமாயணத்தில் அதிகமில்லாமல் சிறிது நாகரீகமாய் மனிதத்தன்மையைப் புகுத்தி இருக்கிறது என்றாலும் இராமாயணம் எழுதியவர்களுக்கு முக்கியமான புதுக்கருத்து எதையும் கற்பிக்கமுடியவில்லை.

பின்னால் இரண்டும் ஒன்றே என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதக் கருதி இருக்கிறேன். அதில் மற்ற பொருத்தமான விபரங்களும் சேர்த்துத் தொகுக்க இருக்கிறேன்.

இதற்கு நான் எழுதுவது தவிர வேறு அத்தாட்சி வேண்டுமென்பவர்கள் பண்டிதர் சேதுபிள்ளை அவர்கள் இயற்றி, சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகத்தாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் 'வேலும் வில்லும்' என்ற நூலில் காணலாம். ஆனால் இந்தப் பொருத்தத்தை நமது பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 20 வருடங்களுக்கு முன் சொல்லி இருக்கிறார்.

| இராமாயணம் | கந்தப்புராணம் |
|---|---|
| 26. சூர்ப்பனகை உற்றார் உறவினரை ஓலமிட்டு அழைத்தாள். | 26. அசமுகி உற்றார் உறவினரை நினைந்து ஓலமிட்டாள். |
| 27. சூர்ப்பனகை 'வெள்ளிமாமலை அசைத்த மன்னவா! என் மூக்கறுத்த பகைவனை நோக்காயா!' என்று இராவணனிடம் ஓலமிட்டாள். | 27. அசமுகி, 'கதிரவனைச் சிறைசெய்த மன்னாவோ! முன்னாவோ! யான்பட்ட குறையினை அறியாயோ' என்று சூரனிடம் அழுதாள். |
| 28. சூர்ப்பனகை 'யான் அடைந்த அவமானத்திற்குப் பழிவாங்க வாராயா' என்று அழுதாள். | 28. அசமுகி சூரனிடம் 'பழிபூண்டு நின்றாயே' என்று அழுதாள். |
| 29. சூர்ப்பனகை அழுதுகொண்டு இராவணன் சபை புகுந்தாள். | 29. அசமுகி சூரன் சபை புகுந்தாள். |
| 30. இராவணன் கோபம்கொண்டு வருந்தி சீதையை அடையக்கருதினான். துணிந்துவிட்டான். | 30. சூரன் கோபங்கொண்டு, மனம் கொதித்து இந்திராணியை அடையக் கருதினான். |
| 31. சீதையைத் தூக்கிவந்து சிறைவைத்தான். | 31. இந்திரா ஒளிந்துகொண்டதால் அவன் மகன் சயந்தனையும், சுற்றத்தார்களையும் சிறை செய்தான். |
| 32. சீதை சிறையில் வாடிஏங்கி அழுதாள். | 32. சயந்தன் சிறையில் வாடி அழுதான். |

## இராமாயணம்

33. சீதை சிறையில் இராமன் வந்து விடுதலை செய்யவேண்டுமென்று எண்ணினாள்.

34. சீதை அழுது எண்ணியதால் இராமன் விற்படை இலங்கைக்கு வந்தது:

35. இராமதூதனாக அனுமான் இலங்கைக்கு வந்தான்.

36. இலங்கை வீரர்களாலும், சூரர்களாலும், கனக்கக்கும் கன்னியர்களாலும் நிறைந்திருந்தது. அங்கு (இலங்கையில்) பசி இல்லை, ஏழை இல்லை, பிணி இல்லை, கவலை இல்லை.

37. இலங்கையில் வானவர் பணிந்து பணிசெய்தனர், காவல் காத்தனர், பணியாளராய் நின்றனர். இதை அனுமான் பார்த்தான்.

38. இராவணனது பெருமையையும் அவனது தவத்தையும் அனுமான் வியந்து போற்றினான்.

39. அனுமான், சீதை சிறை இருந்த அசோகவனம் சென்று சீதையைக்கண்டு அவள் சோகத்தைத் தேற்றினான்.

40. அனுமான் இராவணன்முன் கொண்டுவரப்பட்டு,

41. இராமன் பெருமையைச் சொல்லுகிறான்.

42. அனுமான் இராவணனிடம் 'ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளே இராமனாய்த் தோன்றினான்' என்கிறான்.

43. அனுமான் சொன்னது இராவணன் செவி ஏறவில்லை.

44. அனுமான் 'உன் செல்வம் சிதையாமல், உன் வாழ்வு குலையாமல் இருக்கவேண்டுமானால் சீதையை விட்டுவிடு' என்று இராவணனுக்குச் சொன்னான்.

45. அனுமான் இலங்கையை எரித்தான்.

46. அனுமான், அரக்க வீரரை அடித்தபின் ராமனிடம் சென்றான்.

47. இராவணன் மந்திரிசபை கூட்டினான்; அனுமான் செய்ததை எடுத்துரைத்து வருந்தினான்.

48. இராவணன் சேனைக்காவலன், மகோதரன் முதலியவர்கள் எழுந்து வீரம் பேசுகிறார்கள்.

49. இராவணன் மகிழ்ச்சியும், தீரமும் கொள்ளுகிறான்.

50. இராவணன் தம்பி விபூஷணன் எழுந்து இராவணனுக்குப் புத்தி கூறுகிறான்.

51. 'இராமன் கடவுள்' என்றும், 'நீ வாழவேண்டுமானால் சீதையை விட்டுவிடு' என்றும் விபீஷணன் கூறுகிறான்.

52. இராவணன் எதிரியைப் புகழ்ந்த தம்பியைக் கடிகிறான்.

53. இராவணன், இராமனை ஏளனம் பேசி, இழிவுபடுத்திச் சொல்லுகிறான்.

54. இராவணன், விபூஷணன்மீது குற்றஞ்சாட்டி வைகிறான்.

55 56. விபூஷணன் வருந்தி, நாட்டைவிட்டகலுகிறான்,

## கந்தப்புராணம்

33 சயந்தன் கடவுள் வந்து தன்னை விடுதலை செய்ய வேண்டுமென்று எண்ணினான்.

34. சயந்தன் எண்ணி அழுததால் வீரமகேந்திரத்திற்கு வேற்படை வந்தது.

35. முருக தூதனாகிய வீரவாகு வீரமகேந்திரம் வந்தான்.

36 வீரமகேந்திரத்திலுள்ளவர் வரத்தினில் பெரியார், வன்மையிற்பெரியார் உறத்தினில் பெரியார். அங்கு (வீரமகேந்திரத்தில்) நலிந்து மெலிந்து நரை திரை கொண்டு பசி கொண்டவர் இல்லை.

37. வீரமகேந்திரத்தில் வானவர் வணங்கி, ஏவல் புரிந்தனர்; மீனைக்கொண்டு வந்துகொடுத்தனர்.

38. சூரனின் தவத்தின் பெருமையை வீரவாகு வியந்து புகழ்ந்தான்.

39. வீரவாகு சயந்தன் சிறை இருந்த இடம் சென்று அவனைத் தேற்றினான்.

40. வீரவாகு சூரன்முன் சென்று,

41. முருகன் பெருமையைச் சொல்லுகிறான்.

42. வீரவாகு 'தன்னிகரில்லா இறைவனே முருகனாய்த் தோன்றினான்' என்று சொல்லுகிறான்.

43. வீரவாகு சொன்னது சூரன்செவி ஏறவில்லை.

44 வீரவாகு 'கிளைகிளையோடு நீ செமது வாழ வேண்டுமானால் வானவரைச் சிறையினின்று விடுக, ஆறுமுகன் அடிபணிக' என்று சூரனுக்குச் சொன்னான்.

45. வீரவாகு மகேந்திர நகரை அழித்தான்.

46. வீரவாகு அசுரன் சேனையைச் சிதைத்தபின் அதை விட்டுச்சென்றான்.

47. சூரன் மந்திரிசபை கூட்டினான்; வீரவாகு செய்ததை மந்திரிகளுக்குச் சொல்லி வருந்தினான்.

48. சூரனின் ஆளான சாலருத்தனும், சூரனின் மகனாகிய பானுகோபனும் வீரம் பேசினார்கள்.

49. சூரன் மகிழ்ந்து ஊக்கம் கொள்ளுகிறான்,

50 சூரன் தம்பியாகிய சிங்கமுகன் சூரனுக்குப் புத்தி கூறுகிறான்.

51. 'முருகன் ஆதிபரம் பொருள்' என்றும், 'நீ வாழவேண்டுமாயின் வானவரைவிட்டுவிடு' என்றும் சிங்கமுகன் சொல்லுகிறான்.

52. சூரன் எதிரியைப் புகழ்ந்த சிங்கமுகனை வெறுக்கிறான்.

53. சூரன் சுப்பிரமணியனை ஏளனம் பேசி, அலட்சியமாய்க் கருதிச் சொல்லுகிறான்.

54. சூரன் வீரபாகுமீது குற்றம்சாட்டி வைகிறான்.

55. 56. சிங்கமுகன் வருந்தி, நாட்டைவிட்டு அகலுகிறான்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு

(25-1-47 குடி அரசின் தொடர்ச்சி)

1848ல் பாரிசில் 'அரசியல் விருந்தொன்று' நடத்துவதாக ஏற்பாடாயிருந்தது. அப்போது பிரெஞ்சு மன்னராக இருந்தவர் லூயிபிலிப் என்பவர். இவருடைய சர்க்கார் இந்த விருந்தை நடத்த அனுமதியளிக்கவில்லை. இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் இந்த அடக்குமுறையால் வரப்போகும் பயன் என்ன என்பதை அந்தச் சர்க்கார் அறியாததே ஆச்சரியமாகும்.

புரட்சி ஆரம்பம்

பாரிசில் வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும் இந்தச் சமயத்தில்தான் முதன் முதலாக தோன்றலாயின. தொழிலாளர்களும், சிறு முதலாளிகளும் கோபமடைந்தனர். யாரைத் தாக்குவதென் எதிர்நோக்கியிருந்தனர். கொடிய தொல்லையைக் கொடுத்துவந்த சர்க்கார்தான் அவர்களது கண்களுக்கு இலக்காயினர். புற்றிலிருந்து வெளிக் கிளம்பிவரும் ஈசல்களைப்போன்று இவர்கள் வெளித்தோன்றினர். சர்க்காரை எதிர்க்க முனைந்தனர். வீறுகொண்டு எழுந்தனர். போர்க்கோலம் பூண்டனர்; போர்வீரர்களைத் தாக்கினர். அரசனும், சர்க்காரும் இருந்த இடத்தை வலைபோட்டு தேட வேண்டியதாயிற்று; 'தலை தப்பியது தப்பிரான் புண்ணியம்' என்று தப்பிப்பிழைத்தனர். முடியாட்சி ஒழிந்து குடியாட்சி தோன்றியது, மக்கள் குதூகலம் அடைந்தார்கள். இந்தக் குடியாட்சியில் தீவிர அரசியல்வாதிகளும், கவிகளும், டாக்டர்களும் வானசாஸ்திரிகளும் ரஸாயன சாஸ்திரிகளும் பிரதிநிதிகளாக விளங்கினார்கள்.

இச்செய்தி காட்டுத்தீபோல் ஐரோப்பா கண்டமுழுவதும் பரவலாயிற்று. முடியாட்சிக்குக் குளிர் காய்ச்சல் ஏற்பட்டுவிட்டது. இது இங்கிலாந்தையும் விட்டுவிடவில்லை அங்கு குற்றுயிராயிருந்த இங்கிலீஷ் சார்ட்டிஸ்டு இயக்கம் ஜுவாலைவிட்டு எரிய ஆரம்பித்தது. தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவும் ஆரம்பித்தது. அயர்லாந்துதன்னுடைய தளர்ந்துபோன முயற்சிக்கு உயிருண்டாக்கிற்று. கிளர்ச்சிசெய்ய ஆரம்பித்தது. இதற்கெல்லாம் அஞ்சினதா பிரிட்டிஷ் ஆட்சி என்? பிரிட்டிஷ் ஆட்சி மத்தியதர வகுப்பாரால் அமைக்கப்பட்டது இதனால் கிளர்ச்சிகள் எல்லாம் அடக்கப்பட்டுவிட்டன. சார்ட்டிஸ்டு இயக்கக்கூட்டங்கள் நடவாமல் கலைக்கப்பட்டன. இதற்குத் தலைமையாயிருந்த ஸ்மித் ஓபிரின் என்பவரைப் பிடித்து அடைத்துவிட்டார்கள். இந்நாட்டைத்தவிர, மற்றநாட்டில் எல்லாம் புரட்சி இயக்கங்கள் செய்த கிளர்ச்சி அற்ப சொற்பமானதல்ல. முடியாட்சிகள் முடிசாய்ந்த காட்சி செப்பமுடியாது. தினந்தோறும் எங்கும் உள்நாட்டுக் கலவரங்கள் தோன்றியவண்ணமாயிருந்தன. நேப்பிள் அரசன் தனது அதிகாரத்தைப்பொதுஜனங்களிடத்தில் கொடுத்துவிட்டு தவம்செய்யச் சென்றுவிட்டான். இந்த அண்ணாவைப் பின்பற்றினார் டஸ்கானியாடியூக். நமக்கெதற்கு இந்தத்தொல்லை என்று போய்ம் மரியாதையாக விலகிக் கொண்டார். மிலாந்து தேசத்தாசன் ஒரு கை பார்க்கலாம் என்று வெற்று வீரம் பேசினான். அந்நாட்டு மக்கள் மட்டும் சோணகிரிகளா ஐந்துநாள் துப்பாக்கிகளுடன் போராடினர். குதிரைப்படைகளை விரட்டி விரட்டியடித்தனர். வெனிசும் இதையே பின்பற்றியது. பீட்மாண்ட் அரசனாகிய கார்லோ ஆல்பர்ட்டோ ஜனப்பிரதிநிதி ஆட்சியைத் தானே ஸ்தாபித்துவிட்டதால் வீடு எரிகையில் கிடைத்தது லாபம் என்று சுருட்டிக்கொண்டு போவது போல் உள்நாட்டு கலகங்கள் நடைபெற்று வருகிறநாடுகளின் மீது படையெடுக்கத் துணிந்தான். இத்தாலிக்கே தான்தான் சுதந்தர புருஷன்—வீரன் என எண்ணி ஆஸ்டிரியாமீது போர் தொடுத்தான். கலங்கின தண்ணீரில் மீன்பிடிக்க எத்தனிப்பதுபோல் இவனும் கலக்கமுற்ற நாட்டின்மீது போர் தொடுத்தான் போலும்.

(தொடரும்)

## ஆதிதிராவிடர் சங்க தொடக்கவிழா

15-1-47ல் சேலம் அரிசிப்பாளையம் ஆதிதிராவிடர் சங்க தொடக்க விழா தோழர் குழந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றிய பின் தோழர் எம். பி. சுப்ரமணியம் அவர்கள் தலைவராகவும் தோழர் முருகன் அவர்கள் செயலாளராகவும் கொண்ட ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டது.

## சலவைத் தொழிலாளர் சங்கம்

21-1-47ல் நாமக்கல்லில் சலவைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக நாமக்கல் தோழர் ர. கருப்பண்ணன் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. சி. கருப்பையா, சி. அர. நாகப்பன், பெருமாள் ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

# குடி அரசு

1947 ஆம் பிப்ரவரி மீ 8உ

## என்ன செய்யப் போகிறீர்கள்?

### 1939ல் திராவிடர்கள் அறிக்கை

திராவிடர்களே!

1939ம் ஆண்டில் யுத்தம் துவக்கப்பட்டபோது யுத்தத்தில் பங்குகொண்டு தொண்டாற்றுவதற்காக இம்மாகாணத்து (திராவிடநாட்டுத் திராவிட மக்கள்) ஆரியரல்லாத மக்கள் பலர் ஒன்றுகூடி ஒரு மாநாடு கூட்டி அதன்மூலம் தங்கள் கருத்தைத் தீர்மானித்துச் சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறார்கள்.

அதன் விபரம் இப்போது தோழர்களுக்கு நினைவுறுத்துவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகிறோம்.

8-10-39ந் தேதி ஞாயிற்றுக்கிழமை சென்னை ராயல் தியேட்டர் கொட்டகையில் பார்ப்பனரல்லாதார் பொது மாநாடு என்பதாக ஒரு மாநாடு கூட்டப்பட்டது.

அம்மகாநாட்டிற்கு காங்கரசைச்சேர்ந்தவர்கள்தவிர மற்ற எல்லாக் கட்சிப் பிரமுகர்களும் சுமார் 2000க்குமேல் வந்திருந்தார்கள்.

அம்மாநாட்டிக்குத் தலைமை வகிக்கும்படி பெரியார் இராமசாமியை சர் குமாரராஜா பிரேரேபித்தார்; சர் கே. வி. ரெட்டி நாயுடு ஆமோதித்தார்; தோழர் சிவராஜ், ராஜா பாசுதேவ் ஆகியவர்களும் ஆதரித்தார்கள்.

பெரியார் தலைமையில், யுத்தம் துவக்கப்பட்டவுடன் தாம் காங்கரசாரிகள் பாத்தியதையை மறுத்து, தனது கருத்தை ஜஸ்டிஸ்கட்சி சார்பாக வைசிராயுக்கும் இந்தியா மந்திரிக்கும், "காங்கரஸ் மகாசபை என்பது இந்தியாவின் மக்கள் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்றும், அதோடு செய்துகொள்ளும் எந்தவிதமான பேரத்திற்கும் பிற சமூகங்கள், கட்சிகள் கட்டுப்பட்டதல்ல என்றும், இந்தியாவைப் பற்றிய அரசியல் ஏற்பாடுகளின்போது எல்லா கட்சியையும் குறிப்பாக ஜஸ்டிஸ்கட்சியையும் கலந்துகொள்ளவேண்டும் என்றும், இதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்கின்ற உறுதிமீது யுத்தத்துக்கு ஒத்துழைக்கிறோம் என்றும் தந்தி கொடுத்திருப்பதாகத் தெரிவித்துவிட்டு மற்ற பிரமுகர்களைப்பேசச்சொன்னார். பலர் பேசியபின்பு சர் குமாரராஜா அவர்கள் அடியில்கண்ட தீர்மானத்தை பிரேரேபித்தார்.

அவர் பிரேரேபிக்கும்போது பெரியார் தலைமையைப் புகழ்ந்து கூறிவிட்டு,

காங்கரசின் ஏகப்பிரதிநிதித்துவ உரிமையைப் பல காரணங்கள் கூறி மறுத்துவிட்டு, காங்கரஸ் கொள்கைகள் தங்கள் கட்சிக்கு மாறுபட்டதென்றும் கூறி, அக்கருத்துக்கொண்ட நீண்ட தீர்மானமொன்றைப் பிரேரேபித்தார். அதாவது,

"காங்கரசை இந்தியமக்களின் பிரதிநிதிஸ்தாபனம் என்பதாகக்கொண்டு அதனிடம்பிரிட்டிஷ் சர்க்கார் செய்துகொள்ளும் எந்த ஒப்பந்தமும் தென் இந்தியாவில் வசிக்கும் பார்ப்பனரல்லாத (திராவிட)மக்களைக் கட்டுப்படுத்தாது என்று இம்மாநாடு தீர்மானித்திருக்கிறது" என்ற தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

பிரேரேபித்துப் பின்னும்பேசுகையில்.......................... என்பதாகக் குறிப்பிட்டார். பின்னர் அத்தீர்மானத்தை யொட்டி சர் கே. வி ரெட்டிநாயுடு, தோழர் எஸ். முத்தையா முதலியார், சர் பாத்ரோ, இரட்டைமலை சீனிவாசன், எஸ். சோமசுந்தர பாரதியார், எம். சி. ராஜா, சிவராஜ், சர் பன்னீர்ச் செல்வர், சித்தூர் கன்னைய நாயுடு, எஸ். எஸ். ஆனந்தம், டி. சுந்தரராவ்நாயுடு ஆகிய தோழர்களும் மற்றும் பல தோழர்களும், பெண்களும் ஆக சுமார் 20பேர்களுக்குமேல் பேசியபின்னர் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சர்க்காருக்குத் தந்தி மூலம் அனுப்பப்பட்டது.

மற்றும் அதே சமயத்தில் பெரிய அறிக்கை (மிமோராண்டம்) ஒன்று தென்னாட்டின் நிலைமையும், பார்ப்பனர் கொடுமையையும், 1935வது வருட சீர்திருத்தத்தில் உள்ள குறைபாட்டையும், அதனால் ஏற்பட்ட கெடுதியையும் விளக்கிவிட்டு,

"ஆகவே இந்நிலையில் சர்க்காரோ, மேன்மைதங்கிய வைசிராயோ எங்களையும், மற்றக் கட்சிகளையும் கலக்காமல் அரசியலில் காங்கரசுடன் செய்துகொள்ளும் எந்தவித ஏற்பாடும், ஒப்பந்தமும் எங்களைக் கட்டுப்படுத்தாது என்பதோடு அது எதிர்க்கப்படும் என்பதை எச்சரிக்கை செய்கிறோம்"

என்றும் எழுதி ஏராளமான கையெழுத்துக்களுடன் அனுப்பப்பட்டிருக்கிறது.

இதில் பல கட்சித் தலைவர்களும் பலதனிப்பட்டப்பிரமுகர்களும் கையெழுத்துச் செய்திருக்கிறார்கள்.

அவைகளில் சிலர் பெயர்களைமட்டுங்கீழே குறிப்பிடுகிறோம்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி- ஜஸ்டிஸ்கட்சித் தலைவர், சர் எம். ஏ. குமாரராஜா- அசம்பிளி ஜஸ்டிஸ்கட்சித் தலைவர், சர் ஏ. பி. பாத்ரோ-நீதிக்கட்சி உப

தலைவர், சென்னை மேல் சபையின் தேசிய ஜனநாயக் கட்சித் தலைவர்—சர் ஏ. டி பன்னீர் செல்வம், ஆர். சீனிவாசன் — தாழ்த்தப்பட்டோர் சங்கத் தலைவர், எம். சி. ராஜா-அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் கட்சித் தலைவர், என். சிவராஜ்—ஷெடியூல்டு வகுப்புக் கட்சித்தலைவர், எஸ். முத்தையா முதலியார்-ஜனநாயகக் கட்சித் தலைவர், சி. பாசுதேவ்-தொழிலாளர் கட்சித்தலைவர், திவான் பகதூர் ஏ. அப்பாதுரைபிள்ளை-ரிடையர்டு கலெக்டர், W P.A. சௌந்திரபாண்டியன்—பெரிய தோட்டக்காரர், ராவ்பகதூர் எம். ராமன்-மலையாளம், பி பாலசுப்பிரமணியம், K. A. P. விஸ்வநாதம், ஆல்பர்ட் ஜேசுதாசன், என். ஜீவரத்தனம்-மீன் பிடிப்போர் சங்கத் தலைவர், முதலியவர்கள்.

இப்படியாக இந்த மாகாணத்தில் தமிழ், ஆந்திரா, கேரளா முதலிய எல்லா பாக மக்களும் சேர்ந்து தெரிவித்திருக்கிறார்கள். தெரிவித்ததோடு காங்கரஸ்காரர் யுத்தமுயற்சிக்குச் செய்த கேடுகளையும், எதிர்ப்புக்களையும் சமாளித்துத் தொண்டாற்றி இருக்கிறார்கள்.

நமது சர்க்கார் இவைகள் எவையையும் கவனியாமல் மற்றவர்களை அலட்சியம் செய்து விட்டுக் காங்கரசோடு மாத்திரம் ஒப்பந்தம் பேசிக்கொண்டு மற்றவர்களையும் காங்கரசார் கையில் நிற்கதியாய் ஒப்படைத்துவிட்டு அடக்குமுறைக்கும் துன்பத்துக்கும் நாசத்துக்கும் ஆளாக்கிவிட்டு வேடிக்கைப் பார்க்கிறார்கள்.

இதை இந்தச் சமயத்தில் திராவிட மக்களுக்கும், அப்போது தீர்மானத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், அறிக்கையில் கையொப்பமிட்டவர்களுக்கும் ஞாபகப்படுத்தி "என்னசெய்யப்போகிறீர்கள்" என்று கேட்கிறோம்.

அடக்குமுறைச் சட்டம், பழிவாங்கும் சட்டம், 144 தடை, திராவிடர்களுக்கே வரி, உத்தியோகத்தடை, கல்வித் தடை ஆகியசூழ்ச்சிகளும், மற்றும் பல கொடுமைகளும், கேடுகளும் செய்யப்படுவதோடு அரசியல் நிர்ணயத்தில் அடியோடு நம்மை அலட்சியப் படுத்தி இருப்பது ஆகியவைகளுக்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று சவால் விடுகிறோம்.

## வைத்தியநாத அய்யரின் ஆசை

பிரகாசம் பந்துலுகாருவின் ஆட்சியில் அவசர அடக்குமுறைச் சட்டம் அமுலுக்கு வந்ததும் சென்னைமாகாணம் முழுவதும் ஒரே கொந்தளிப்பு இவ்வடக்குமுறைச் சட்டம் மந்திரிசபைக்கே ஆபத்தை விளைவித்துவிடும் என்ற பேச்சு தான் எப்பக்கம் திரும்பினும். ஒருசில தேசிய ஏடுகள் தவிர ஏனையஏடுகள் யாவும் அடக்குமுறைச் சட்டத்தைக் கண்டிக்கப் பின்வாங்கவில்லை.

மதுரை வைத்தியநாத அய்யர் சென்னை சட்டசபைக் கூட்டத்தில் 'அவசர அடக்குமுறைச் சட்டத்தை அரசாங்கம் வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்' என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அய்யரின் தீர்மானம் அங்கத்தினர்கள் பலரால் ஆதரிக்கப்பட்டது. ஒரு சிலர் எதிர்க்கவும் செய்தனர். அய்யரின் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நேரத்தில் சட்டசபை ஒத்திப் போடப்பட்டது.

உடனே அடுத்தநாள் செய்தித்தாள்களில் வைத்தியநாத அய்யரின் தீர்மானத்தைப்பற்றி பாராட்டி எழுதப்பட்டிருந்தது. 'அவசர அடக்குமுறைச்சட்டம் தோற்கடிக்கப்படுவது உறுதி; எனவே பிரகாசம் பந்துலுகாருவால் அமைக்கப்பட்ட மந்திரிசபை கலைந்துவிடும்' என்று பேசப்பட்டது. அடுத்தபடியாக யார் முதல் மந்திரியாக வருவது என்ற ஹேஷ்யம் பலமாக விருந்தது. என்ன ஆயிற்று?

உடனே காங்கரஸ் மேலிடம் குறுக்கிட்டது. அடக்குமுறைச்சட்டத்தின் அவசியத்தைப்பற்றி ஞானோபதேசம் செய்தது மேலிடம். உடனே அடுத்தநாள் முடிவு செய்யப்பட்டது வைத்தியநாத அய்யரின் தீர்மானம் வாபீஸ் பெறப்படவேண்டுமென்று. அதற்கு வைத்தியநாத அய்யரும் உடன்பட்டாராம். அவசர அடக்குமுறைச்சட்ட மசோதாவில் ஒரு சில திருத்தங்கள் ஏற்படுமாம்.

முதல்நாள் அவசரச்சட்டமே பிரகாசம் பந்துலுகாருவின் மந்திரிசபைக்கு இறுதிகாலத்தைக் காட்டிவிடும் என்று பேசப்பட்டதே, அது என்ன ஆயிற்று? அடுத்தநாளே அந்த எண்ணத்தில் மண் விழுந்து விட்டதே!

வைத்தியநாத அய்யருக்குத் தெரியாதா தான் அவசரச் சட்டத்தை எதிர்த்துக்கொண்டு போகும் தீர்மானம் நிறைவேறாதென்று? நன்றாகத் தெரியும். பின்னர் ஏன் அத்தீர்மானத்தைக் கொண்டு போனார்? கம்யூனிஸ்ட்கள் கைது செய்யப்படுகின்றார்களே என்று அவர்கள்மேல் உண்டான கருணையாலா? இல்லவேயில்லை. பின் எதற்காக? அதில்தான் உள்ளது சாணக்கிய பரம்பரையிற் றோன்றிய வைத்தியநாத அய்யரின் தந்திரம்.

பொதுமக்களுக்கு வெறுப்பளிக்கக்கூடிய அவசரச் சட்

டத்தை எதிர்ப்பதின் வாயிலாகப் பொதுமக்களின் செல்வாக்கைப் பெறலாம் என்று வைத்தியநாத அய்யர் கருதியிருப்பார். மேலும் பிரகாசத்தை அச்சுறுத்துவதின் மூலம் தனது சகாவான டி. எஸ். எஸ். ராஜனோ அல்லது தானோ சென்னை சட்டசபை மந்திரியாக வரலாம் என்று அய்யர் கருதியிருக்கக்கூடும்.

அடக்குமுறைச் சட்டத்தால் தான் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதுகின்றனர். அதன்படியே ஏதாவதொரு காரணத்தைக் காட்டி ஒவ்வொரு மாகாணத்திலும் அடக்குமுறைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்துள்ளனர் மேலிடத்துக் காங்கிரஸ்காரர்கள். அதையொட்டியே 'கம்யூனிஸ்ட்களின் தொந்திரவு' என்ற காரணத்தைக் காட்டிச் சென்னை மாகாணத்திலும் அடக்குமுறைச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. உண்மை இவ்வாறிருக்க அடக்குமுறைச் சட்டத்தைச் சென்னை மாகாணத்தில் மாத்திரம் வாபீஸ் பெறவிட்டுவிடுவார்களா மேலிடத்து காங்கிரஸ்காரர்கள்? ஒருக்காலும் அநுமதி கொடுக்கும்படி விட்டுவிடமாட்டார்கள் என்பது உறுதி.

இவ்வுண்மையை வைத்தியநாத அய்யர் அறிந்துகொள்ளவில்லையா? நன்றாக அறிந்திருப்பார். பின்னர் ஏன் அவசரச் சட்டத்தை எதிர்த்தார்? ஏதாவது ஒரு வழியில் தன்னை விளம்பரப்படுத்திக்கொண்டு தான் ஒரு மந்திரிப் பதவியைப் பெறலாம் என்று அய்யர் ஆசைப்படுகிறார் போலும்! அவர் ஆசை நிறைவேறுமா? பொறுத்துப்பார்ப்போம்.

---

## மதிப்புரை

### 'கோயில்களை மூடுங்கள்'

இந்நூல் தோழர் சோமநாதன் அவர்களால் ஆக்கப்பட்டது. கோயில்களிலே மூடத்தனம் தாண்டவமாடுவதையும், கோயிற்பூஜை செய்கிற பார்ப்பனர்களின் புரட்டையும் இந்நூலில் தெளிவுபடுத்தியுள்ளார் தோழர் சோமநாதன். பகுத்தறிவு பாழ்படுதற்குக் காரணமாயுள்ள கோயில்கள் தொழிற்சாலைகளாகவும் கல்விச்சாலைகளாகவும் மாறவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது இந்நூலில். இந்நூல் யாவரும் படித்தற்குரியது.

இதன் விலை 8 அணா

கிடைக்குமிடம்:

சாந்தி நிலையம்,
துறையூர், திருச்சி.

0 0

### 'படவுலகில் கடவுள்கள்'

இதன் ஆசிரியரும் தோழர் சோமநாதன்தான். தமிழ்நாட்டில் பகுத்தறிவைப் பாழ்படுத்தக்கூடிய கற்பனைக் கடவுள்களைப்பற்றிய புராணக்கதைகளையே பெரும்பாலும் சினிமாப் படங்களாக எடுக்கட்டுவதைக் கண்டித்தும் சமூகச் சீர்திருத்தப் படங்கள் இனிமேலாவது தயாரிக்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்தியும் மிகத் தெளிவான நடையில் இந்நூலில் எழுதியுள்ளார். யாவரும் படித்து பயன்பெறற்குரியது.

இதன் விலை 4 அணாதான்.

கிடைக்குமிடம்:

எரிமலைப் பதிப்பகம்,
துறையூர், திருச்சி.

0 0

### 'நிலவு'

தோழர் பர்தூர் கிழார் அவர்களைப் பதிப்பாசிரியராகக்கொண்ட 'நிலவு' என்ற திங்கள் வெளியீட்டைப் பார்வையிட்டோம். சீர்திருத்தக் கொள்கைகளும், திராவிடர் கழகக் கொள்கைகளும், அறிஞர்களால் எழுதப்பெற்ற கட்டுரைகளைக்கொண்டு நன்கு விளக்கப்பட்டுள்ளன நிலவில். யாவரும் படித்தற்குரியது.

இதன் விலை தனிப்பிரதி 4 அணா

கிடைக்குமிடம்:- நிலவு நிலையம்,
இராயப்பேட்டை, சென்னை.

0 0

### 'வேளாளன்'

தோழர் குழந்தை அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட 'வேளாளன்' என்ற திங்கள் வெளியீட்டைப் பார்வையிட்டோம். வேளாளர்களின் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு இத்திங்கள் வெளியீடு நடைபெறுகின்றது. சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்ட கட்டுரைகள் நிரம்பிய 'வேளாளன்' யாவராலும் படித்தற்குரியது.

இதன் விலை 4 அணா.

ஆண்டுசந்தா 3 ரூபாய்.

கிடைக்குமிடம்:

வேளாளர் நிலையம், பவானி,
(வழி) ஈரோடு.

## பொதுக்கூட்டம்

26-1-47ல் திருப்பூரில் திராவிடர் கழகத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாலை சுமார் 4 மணிக்குத் திருப்பூர் முனிசிபல் கட்டிடத்திலிருந்து க. சு. ப. தொண்டர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு ரோடியோ மைதானத்திற்கு வந்தனர். தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் 6-30 மணிக்குத் தொடங்கியது. சட்டையன், பாலசுந்தரம், பாலகுரு, புலவர் தியாகராசன், டி. பி. என். ராஜா ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். [illegible] நிதிக்காகக் கூட்டத்தில் ரூ. 5 வசூலாயிற்று.

## திராவிட மாணவருக்கு முதற்பரிசு

21-1-47 மாலை 6 மணிக்குச் சேலம் மாணவர் காங்கிரசின் சார்பில் பாரிஸ்டர் எஸ். வி. இராமசாமி அவர்கள் தலைமையில் ஓர் பேச்சுப் போட்டி நடைபெற்றது. பல கட்சியைச் சேர்ந்த மாணவர்கள் போட்டிக்குக் கொடுக்கப்பட்டிருந்த 'சுயநிர்ணயம்' என்ற பொருள்பற்றிப் பேசினார்கள். முடிவில் நீதிபதிகள் திராவிட மாணவர் கழக செயற்குழு அங்கத்தினரும், சேலம் கல்லூரி மாணவருமான தோழர் வி. சி. குழந்தைசாமி அவர்களுக்கு முதற்பரிசு என்று முடிவு செய்தனர். தோழர் குழந்தைசாமிக்குப் பரிசாக ஓர் புத்தகம் வழங்கப்பட்டது.

## வேண்டுகோள்

அன்பார்ந்த தோழர்களே!

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மன்னார்குடி, பட்டுக்கோட்டை திருத்துறைப்பூண்டி ஆகிய தாலுக்காவிலுள்ள ஆதிதிராவிடர் களின் முயற்சியால் 1939ம் ஆண்டி லிருந்து மன்னார்குடி தாலுக்கா பாலையூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் சங்கம் நிறுவப்பட்டு பொதுமக்களின் ஆதரவில் நடைபெற்று வருகிறது.

ஆதிதிராவிட மாணவர்களுக்கும் பெற்றோரை இழந்த ஏழை அநாதைகளுக்கும் இலவசக் கல்வியும் உணவும், ஆடையும் கொடுத்து அவர்களை முன்னேற்றுவதே அச்சங்கத்தின் முக்கிய குறிக்கோள். அக்குறிக்கோள் நிறைவேறுவதற்கு எங்களுக்கு ஆதரவளித்துக் கீழ்க்காணும் முகவரிக்குத் தங்களாலியன்ற பொருள் அனுப்புமாறு வேண்டுகின்றேன்.

எம். ஏ. மாரிமுத்து,
பொதுச் செயலாளர்,
ஆதிதிராவிட சங்கம், பாலையூர் P O
மன்னார்குடி தாலுக்கா.

## பினாங்கு தொழிற்சங்க பெடரேஷன்

22-12-46ல் பினாங்கு, வெல்லஸ்லி மாகாணம் ஆகியவற்றிலுள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் கூட்டம் பினாங்கில் நடைபெற்றது.

தாய்நாட்டிற்காக உயிர்நீத்த வீரன் சாம்பசிவத்தைப் பாராட்டியும், திருவாங்கூரில் நடைபெறும் கொடுமை ஆட்சியைக் கண்டித்தும், மலேயா நாட்டில் 5 ஆண்டுகளாக வசித்து வரும் எல்லோருக்கும் ஓட்டுரிமை வழங்கவேண்டுமென்றும், கோலையில் தொழிலாளர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைக் கண்டித்தும், பிரகாசத்தின் மில் ஒழிப்புத்திட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. [க-நி]

## திருச்சி நகர அமைச்சூர்வ்ஸ கழகம்

26-1-47ல் கைகழகக் கட்டிடத்தில் 13ம் ஆண்டு பேரவைக் கூட்டம் நடைபெற்றது: தோழர் என். சங்கரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஓர் நிர்வாகக்கமிட்டித் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## பெரியார் வாசகசாலை

25-1-47ல் சந்தனவாசலில் பெரியார் வாசகசாலை நிறுவப்பட்டு திறப்புவிழா நடத்தப்பட்டது. தோழர் கிருஷ்ணன் பெரியார் படத்தையும் தோழர் பாலகிருஷ்ணன் பெரியார் வாசகசாலையையும் திறந்துவைத்தனர். டாக்டர் இராமநாதன், தங்கவேல், நடேசன், டாக்டர் அண்ணாமலை ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றினர். அதன் நினைவாகக் குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## பகுத்தறிவுக் கழகம்

14-1-47ல் மாயவரத்தில் நகராண்மைக் கழகத் தலைவர் தோழர் சி. சனகசபை அவர்கள் தலைமையில் 'பகுத்தறிவுக்கழகம் திறக்கப்பட்டது. வழக்கறிஞர் தோழர் லட்சுமிகாந்தம் அவர்கள் கழகத்தைத் திறந்துவைத்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் தோழர் ஒளவை துரைசாமி அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

### இராமாயணம்

57. 58. போர் நடக்கிறது. முதல்நாள் போரில் இராவணன் தோற்று மீளுகிறான்.

59. இராமன் 'இன்றுபோய் நாளைவா' என்கிறான்.

60. இராமன் இராவணனிடத்தில் இப்பொழுதாவது சீதையை விடுத்து பிழைத்துப்போ' என்கிறான்.

61. இராவணன் மறுமொழி கூறாது அரண்மனை சென்றான்.

62. இந்திரஜித்தன் போருக்குச் சென்று தோல்வி அடைந்து தந்தையிடம் வந்து 'இராமனை வெல்லமுடியாது, சீதையை விட்டுவிடு உயிர்வாழலாம்' என்கிறான்.

63. இராவணன் மகன்மீது கோபம்கொண்டு 'உயிரை விடுவேனே ஒழிய சீதையை விடமுடியாது; மானம் பெரிதே ஒழிய உயிர் பெரிதல்ல' என்கிறான்.

64. மகன் இந்திரஜித்தன், இலச்சுவனோடு போர் தொடுத்து மாண்டான்.

65. இராவணன் இராமனுடன் போரிட்டு மடிந்தான்.

66. மண்டோதரி புலம்பி உடன்கட்டை ஏறினாள்.

67. சீதையை இராமனுக்கு மணம் செய்வதில் விஸ்வாமித்திர முனி ஏற்பாடு செய்கிறார்.

### கந்தப்புராணம்

57 58. போர் நடக்கிறது. முதல்நாள் போரில் சூரன் மகன் பானுகோபன் தோற்று மீளுகிறான்.

59. முருகன் பானுகோபனிடத்தில் 'இன்று உன்னை போகவிடுகிறேன' என்கிறான்.

60. முருகன் இரண்டாம்நாள் போரில் சூரனிடத்தில் இப்போதாவது வானவரை விடுத்தால் உயிர்வாழ்வாய், இல்லையெனில் மடிவாய்' என்றான்.

61. சூரன் மறுமொழி கூறாது அரண்மனை அடைந்தான்.

62. பானுகோபன் போரில் தோற்று, தந்தை இடம் வந்து, 'வானவரை விட்டுவிட்டு, உயிர்வாழலாம்' என்கிறான்.

63. சூரன் மகன்மீது கோபித்து 'உயிர்விட்டாலும் விடுவேன்' வானவரை விட்டு வசைக்காளாகி வாழமாட்டேன்' என்றான்.

64. மகன் பானுகோபன் போருக்குச் சென்று மடிகிறான்.

65. சூரன் முருகனுடன் போரிட்டு மடிந்தான்.

66. பதுமை புலம்பி உடன்கட்டை ஏறினாள்;

67. வள்ளியைக் கந்தனுக்கு மணம்செய்ய நாரதரிஷி ஏற்பாடு செய்கிறார்.

இப்படியாகக் கந்தப்புராணமும், இராமாயணமும் ஒரே தத்துவத்தைக்கொண்டு ஆரியமதப் பிரசாரத்துக்காகத் திராவிடர்களை இழிவு படுத்திக் காட்டுமிராண்டி காலத்தில் எழுதப்பட்டவைகளாகும். (தொடரும்)

ரோஜா முத்தையா

## நெல்லை மாவட்ட தோழர்கட்கு

26-1-47ல் தூத்துக்குடியில் பெரியார் அவர்களிடம் கொடுப்பதற்கிருந்த பணமுடிப்பும், பெரியார் அவர்களின் நெல்லை மாவட்ட சுற்றுப்பிரயாணமும் காங்கரஸ் ஆட்சியினரால் தடையுத்திரவு (144) போடப்பட்டதின் காரணமாகத் தடைபட்டு விட்டன. என்றாலும் ஷை பணமுடிப்பு விழா'வும், பெரியார் ஈ வெ. ரா. சுற்றுப்பிரயாணமும் இன்னும் 2வாரத்திற்குப்பிறகு தொடர்ந்து நடைபெற்றேதீரும். எனவே நெல்லை மாவட்டத் தோழர்கள் எதற்கும் ஆயத்தமாயிருக்கவேண்டுமென்று பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
கே. வி. கே. சாமி, செயலாளன்,
தெ. மா. திராவிடர் கழகம்,
தூத்துக்குடி.

## அடக்குமுறைக்குக் கண்டனம்

27-1-47ல் திருப்பூர் மாணவர் சம்மேளனத்தின் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் சென்னை அரசாங்கத்தாரின் அடக்குமுறைச் சட்டத்தைக் கண்டித்தும் அடக்குமுறைச் சட்டத்தின்படி கைதுசெய்யப்பட்ட தலைவர்கள், மாணவர்கள் முதலியவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென்றும், அவர்களின்மீது காட்டப்பட்ட வழக்குகளை வாபீஸ் வாங்கவேண்டுமென்றும் ஓர் தீர்மானமும், வியட்நாம் இனத்தைக்கொண்டாடிய மாணவர்மீதுபோலீசார் தடியடி, கண்ணீர்ப் புகை பிரயோகித்ததைக் கண்டித்தும், அதற்குப் பகிரங்க விசாரணை கோரியும் ஓர் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டன.

அடக்குமுறையை எதிர்த்து திருப்பூர் நஞ்சப்பா உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஒருநாள் ஹர்த்தால் செய்தனர்.

## தமிழ்த்திருநாள்

கல்லார்பட்டியில் 17-1-47ல் தோழர் எம். ஆர். மித்திரன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்ட தமிழ்த் திருநாளில் காசிபாளையம் தோழர் க. சி. குப்புசாமி அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

## திருத்தம்

1-2-47 குடியரசு இதழ் 3ம் பக்கத்தில் 'மதுரை மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக்கூட்டம்' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியில் 2ம் பத்தியில் 10ம் வரியில் 'கோவை மாவட்ட திராவிடர் கழகத்திற்கு" என்றிருப்பதை "மதுரை மாவட்ட திராவிடர் கழகத்திற்கு" என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

## பதிவுத் திருமணம்

பட்டிவீரன்பட்டி தோழர் W P.A. சௌந்திரபாண்டியன் அவர்களின் இரண்டாவது மகன் தோழர் பாஸ்கரன் பி. ஏ., அவர்களுக்கும், உசிலம்பட்டி தோழர் அண்ணாமலை அவர்கள் மகன் தோழியர் ஞானாம்பிகை அவர்களுக்கும் 27-1-47ல். 2-45 மணிக்கு உசிலம்பட்டியில் நன்றாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. சர் பி. டி. ராஜன், வி. வி. ராமசாமி, சுந்தர வடிவேல் (மதுரை D. E O) என். தில்லைகோவிந்தன், அ. பொன்னம்பலனார் ஆகிய தோழர்கள் திருந்திய திருமணங்குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். அன்பளிப்புகளும், வாழ்த்துரைகளும் மணமக்களுக்குப் பலரால் வழங்கப்பட்டன. சிற்றுண்டிக்குப் பின்னர் தோழர் சௌந்திரபாண்டியன் நன்றிகூறலுடன் மணவிழா முற்றுபெற்றது.

## அனுதாபம்

இருதயபுரம் தோழர் சாமிநாதன் அவர்கள் நோய்வாய்ப்பட்டுத் தஞ்சை மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டும் பயனின்றி இயற்கையெய்தினார் என்ற செய்திகேட்டு யாம் பெரிதும் வருந்துகிறோம். அவர் சந்தனமேரி என்ற ஆதித்திராவிடப் பெண்ணை மணந்தவர். குடியரசு நிலையத்தில் சிலவாண்டுகள் பணிபுரிந்தவர். இந்தி எதிர்ப்பில் தன் வாழ்க்கைத் துணைவியாருடன் 6 மாதம் சிறைசென்றார் அவர் பிரிவினால் வருந்தும் அன்னாரின் மனைவியாருக்கும், மூன்று குழந்தைகளுக்கும், உற்றார் உறவினர், தோழர் முதலியவர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## திறப்புவிழா

தாராவி (பம்பாய்):- 26-1-47 ஞாயிறு மாலை 5-மணிக்குத் தாராவியில் எஸ். எம். சால் கட்டிட முன் பக்கத்தில் திருச்சி வழக்கறிஞர் தோழர் வி. முனுசாமி பி.ஏ. பி.எல். அவர்கள் தலைமையில் தாராவி திராவிடநாடு பகுத்தறிவு கழகத்தின் 3வது ஆண்டுவிழா நடைபெற்றது. பவானி தோழர் கே. பொன்னப்பன் பி. ஏ., அவர்களும், தோழர் எ. துரைராஜ் அவர்களும், தலைவர் அவர்களும் சிறந்த சொற்பொழிவாற்றினார்கள். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் மற்றும் பலரும் வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தனர். பின்னர் கே. ஐயாத்துரை, எம். பி. சுப்பையா, எஸ். சீநிவாசன் ஆகியோர்கள் புது உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

## மறைவு

தாரமங்கலம் திராவிடக் கழகத் தலைவர் தோழர் பி. மே. வைய்யாபுரி அவர்கள் தனது 76வது வயதில் 12-1-47ல் மாரடைப்பால் இயற்கையெய்தியது குறித்து வருந்துவதோடு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திராவிட கழகத்தார், தாரமங்கலம்.

o o

இலுப்பையூரணி வாலிப முன்னேற்ற சங்கக்காரியதரிசி தோழர் எஸ். மோஸஸ் அவர்களின் சகோதரி 25-12-46ல் இயற்கையெய்தியது குறித்து நாங்கள் வருந்துவதோடு எங்கள் அனுதாபத்தையும் அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாலிப முன்னேற்ற சங்கத்தார்,
இலுப்பையூரணி.

o o

நமது இயக்கத் தோழரான கல்லூரணி, புன்னைமுத்து அவர்களின் அன்னை வேலாயி அம்மாள் 17-11-46ல் இயற்கை எய்தியது கேட்டு நாம் வருந்துவதோடு எமது வருத்தத்தையும்அன்னார் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Edited, Printed, and Published by N.Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.